**நெழுவ பிரதேச சபை**
**காலி மாவட்டம்**

------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2016 ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 ஏப்ரல் 11 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 31 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், 2016 ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 நவம்பர் 14 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்ந்து, நெழுவ பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

வழங்கள் மற்றும் உபகரணங்கள் செலவு ரூபா 38,182 தொகை மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

#### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக் கூற்றுகளில் காட்டப்பட்டுள்ள கூட்டுத் தொகை 63,149,997 தொகைக்கான 05 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் மற்றும் அதனொடு தொடர்புடைய துணை பதிவேடுகள் / அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே, கூட்டுத் தொகை ரூபா 7,939,238 இற்கான சமமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

#### 1.3.3 தொங்கல் கணக்கு

பல வருட காலமாக முன் கொண்டு வந்து காணப்படும் ரூபா 72,893 தொங்கல் கணக்கின் செலவு மீதியை இனங்கண்டு உரிய சீராக்கல் மேற்கொள்ளப்பட்டு, கணக்குகளை தீர்ப்பதற்காக மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

#### 1.3.4 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) (i) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு 9 நிர்மாண வேலைகள் தொடர்பாக கிடைக்க வேண்டிய கூட்டுத்தொகை ரூபா 3,687,277 தொகைக்கான அரசார்ந்த உதவியினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) மீளாய்வாண்டு இறுதித் திகதியன்று உள்ளவாறு ரூபா 44,300 தொகைக்கான அனுமதிப்பத்திர கட்டணமும், ரூபா 241,085 தொகைக்கான வாடகையும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(iii) 2008 ஆண்டு முதல் முன் கொண்டு வந்து காணப்படும் ரூபா 549,800 தொகைக்கான வாராந்தச் சந்தை நிலுவை ஒரே தடவையில் செலுத்தும்

தொகையை மீளாய்வாண்டின் போதும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டு இறுதித் தினத்தில் உள்ளவாறு 29 நிர்மாண வேலைக்காக செலுத்த வேண்டியிருந்த கூட்டுத்தொகை ரூபா 11,092,329 தொகையினை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

நிதிக் கூற்றுகளில் காட்டப்பட்டுள்ள ரூபா 41,124,248 தொகைக்கான காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக உரிமைகள் தொடர்பான உறுதிகளும், கூட்டுத்தொகை ரூபா 364,155 தொகைக்கான நிலுவை வருமானம் தொடர்பாக நாளது வரை ஆக்கப்பட்ட வருமானப் பதிவேடும், கூட்டுத்தொகை ரூபா 11,352,551 தொகைக்கான கடன் கொடுத்தோர் தொடர்பாக கடன் கொடுத்தோர் பதிவேடும், ரூபா 104,337 தொகைக்கான இனங்காணப்படாத வருமானங்கள் தொடர்பாக பற்றுச் சீட்டுகளும் அட்டவணைகளும் , கூட்டுத்தொகை ரூபா 2,684,282 தொகைக்கான வங்கி கணக்கு மீதிகளுக்கான மீதிகளை உறுதிப்படுத்தல்களும், ரூபா 116,497 தொகைக்கான வழங்கப்பட்ட போதிலும் கொடுப்பனவிற்காக சமர்பிக்கப்படாத காசோலைகளுக்காக காசோலைகள் வழங்கிய திகதியும், சமர்பிக்கபடாமையால் கணக்காய்வின் போது அவற்றை திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்ள முடியாதிருந்தது.

**1.3.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத தீர்மானங்களுடன் இணக்கமின்மை**

இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணங்கள் 1645 மற்றும் 1646 இன் பிரகாரம் சபைக்குச் சொந்தமான 11 வாகனங்களுக்கான நாளாந்த ஓட்ட அட்டவணைகள் மற்றும் மாதாந்த பொழிப்புக்கள் கணக்காய்விற்கு சமர்பித்திருக்கவில்லை.

**2 நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுகளின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டு வரும்செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,620,948 தொகையாக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 226,718 தொகையாக காணப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 1,394,230 இற்கான வளர்ச்சி ஒன்றினைக் காட்டியது.

**2.2 வருமான நிருவாகம்**

**2.2.1 ஏக்கர் வரி**

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 29,460 இற்கான ஏக்கர் வரி மீதியொன்று அவதானிக்கப்பட்டது. 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 159(1)(அ) இன் பிரகாரம் நிலுவை ஏக்கர் வரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**2.2.2 வாடகை வருமானம்**

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 241,085 தொகையான நிலுவை,வாடகையொன்று அவதானிக்கப்பட்டது. வாடகையாளர் 10 பேர்களிடம் தொடர்ச்சியாக ரூபா 10,000 இனை விட மிகையான நிலுவை மீதியொன்று அறவிடப்பட வேண்டியிருந்ததுடன், அதனை அறவீடு செய்வதற்காக போதியளவு முயற்சி ஒன்று எடுத்திருக்கவில்லை.

### 2.2.3 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின பிரதான செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 5,000,000 இற்கான முத்திரைக் கட்டணம் மற்றும் ரூபா 243,792 இற்கான நீதிமன்றத் தண்டப்பணம் என்பன கிடைக்க வேண்டியிருந்தன.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ திறமையின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டது.

(அ) திருத்த வேலைகள் செய்யப்பட்ட பின்னர் பயன்படுத்தக் கூடியதாக இருந்த WPSE 2811 கொண்ட கைடிரக்டர் மற்றும் SPVG2330 இலக்க மோட்டார் சைக்கிள் முறையே 2012 ஆம் ஆண்டு மற்றும் 2015 ஆம் ஆண்டு முதல் ஓடுவதற்கு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) JA 2763 கொண்ட டிரக்டர் மற்றும் JB 2677 இலக்கம் டெயிலர் என்பன திருத்தப்படாமையால் ஓட்டத்திலிருந்து அகற்றப்ட்டிருந்தது.

(இ) ZA 4987 ஆம் இலக்க பெக்கோ லோடர் இற்கான அறவிடப்பட வேண்டிய நிலுவை வருமானம் ரூபா 229,759 தொகையாகும்.

## 4 நல்லாளுகையும் கணக்களிப் பொறுப்பும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதீட்டில் அடங்கியுள்ள 05 செலவு விடயங்களின் கூட்டுத்தொகை ரூபா 12,366,035 தொகைக்காக சேமிப்பும், மேலும் 02 செலவு விடயங்களின் கூட்டுத்தொகை ரூபா 89,632 இற்கான பிரதிகூலமான முரண்களும் 07 வருமான விடயங்களில் ரூபா 10,118,934 இற்கான நெருங்கி இருக்காத இலக்கு வருமானமும் காணப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான நிதி முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தபடவில்லை என அவதானிக்கப்பட்டது.

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணங்கள் 133 மற்றும் 134 இன் ஏற்பாடுகள் மற்றும் உள்ளுராட்சி ஆணையாளர் (தென் மாகாண) இன் 2014 பெப்ரவரி 24 ஆம் திகதிய தபபா/யஹ/01/நா.ச.லே சுற்றறிக்கையின் பிரகாரம் உள்ளக கணக்காய்வு அலுவலர் ஒருவர் நியமனம் செய்திருந்த போதிலும் போதியளவு உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுச் செயற்படுதல்

2009 ஜுன் 09 ஆந் திகதி DMA/2009 (i) இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நிறுவுவதற்காக மீளாய்வாண்டு இறுதிவரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 5 முறைமைகள் மற்றும் கட்டுபாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது கணக்காய்வு ஐயவினாக்கள் மூலம் சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. கீழே விவரிக்கப்பட்டுள்ள முறைமைகள் மற்றும் கட்டுபாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்த வேண்டும்.

| முறைமைகள் | | முறைமையில் முக்கிய குறைபாடுகள் | |
|---|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக்கள் | (i) | காணிகளில் உருத்துறுதிகள் காணப்படவில்லை. |
| | | (ii) | சபைக்கு சொந்தமான காணிகள் மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டு அவற்றின் பெறுமதியினை பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்திருக்கவில்லை. |
| | | (iii) | சபைக்கு சொந்தமான சனசமூக நிலையங்கள், மையவாடிகள் மற்றும் பொது இடங்கள் தொடர்பான தகவல்கள் உட்படுத்திய பதிவேடு ஒன்று பேணப்படவில்லை. |
| | | (iv) | சபையினால் நட்டங்கள் மற்றும் சேதங்கள் பதிவேடு பேணப்படவில்லை. |
| (ஆ) | வருமானங்கள் சேகரித்தல் | | நிலுவை வருமானம் சேகரிப்பதற்காக முறையான வேலைத்திட்டமொன்று தயாரித்து செயற்படுத்தியிருக்கவில்லை. |
| (இ) | கணக்கீடு மற்றும் பதிவேடுகள் பேணல் | (i) | முன்னைய ஆண்டுகள் முதல் முன்கொண்டுவரப்படும் கணக்கு மீதிகள் தொடர்பாக கவனம் செலுத்தி கணக்குகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| | | (ii) | நிதிக்கூற்றுக்களில் மற்றும் அதனோடு தொடர்புடைய அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே வித்தியாசங்களை இனங்கண்டு உரிய சீராக்கல்கள் மேற்கொள்ளப்பட்டு கணக்குகளை சரிசெய்திருக்கவில்லை. |
| (ஈ) | முகாமைத்துவத் திறமையின்மை | (i) | குப்பை முகாமைத்துவம் தொடர்பாக முறையான வேலைத்திட்டமொன்று காணப்படவில்லை. |
| | | (ii) | வாகனங்களில் காணப்பட்ட சிறிய திருத்த வேலைகளை மேற்கொண்டு, ஓட்டத்திற்கு பயன்படுத்தியிருக்க வில்லை. |

(iii) வாகனங்களின் உரிமைகளை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(உ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(i) வருடாந்த பாதீட்டின் மூலம் நிதி ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த 02 செலவு விடயங்களில் முழு ஏற்பாடுகளும் மேலும் 05 செலவு விடயங்களில் கணிசமான அளவு சேமிப்புக்களும் காணப்பட்டன.

(ii) அங்கீகரிக்கப்பட்டிருந்த எல்லையை மிகைத்து இரண்டு செலவு விடயங்களில் செலவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(iii) 07 வருமான விடயங்களில் பாதீட்டில் காட்டப்பட்டிருந்த வருமான இலக்கினை நெருங்கியிருக்கவில்லை.

(iv) செலவினங்கள் மற்றும் வருமானம் தொடர்பாக தொடர்செயல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, பாதீட்டை திருத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.